2017 ஜனவரி 27] [திரு. கே.ஏ. செங்கோட்டையன்]

தட்டும் ஒலி) அதில் நானும் ஒருவன் என்பதை சுட்டிக்காட்ட விரும்புகிறேன். ஆகவே, இந்த அரசைப் பொறுத்தவரையிலும் சிறந்த முறையிலே பணியாற்றிக் கொண்டிருக்கிறது. கழகத்தைப் பொறுத்தவரையிலும் எஃகு கோட்டையாகத் திகழ்ந்து கொண்டிருக்கிறது. உங்களைப் போன்றவர்களும் நினைத்தாலும் கனவிலும். . . (குறுக்கீடுகள்) நீங்கள் நினைக்கவில்லையா? சட்டம் ஒழுங்கை சீர்குலைக்க வேண்டுமென்று நீங்கள் கருதினாலும், இந்த இயக்கத்தை எவராலும் அசைக்க முடியாது, அசைக்க முடியாது என்று சொல்லி என் உரையை நிறைவு செய்கிறேன். நன்றி, வணக்கம். (குறுக்கீடுகள்)

3. தகவல் கோரல்—*தொடர்ச்சி*

(ஆ) குடியரசு தின விழா அழைப்பிதழ் சட்டமன்ற உறுப்பினர்களுக்கு அனுப்பப்படாதது—*தொடர்ச்சி*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அமைதியாக இருங்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.*

***மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்திய தேசிய காங்கிரஸ் சட்டமன்றக் குழு தலைவர் மாண்புமிகு அண்ணன் திரு. கே.ஆர். இராமசாமி அவர்கள், சட்டமன்ற உறுப்பினர்களுக்கு குடியரசு தின விழா அழைப்பிதழ் வழங்கப்படவில்லை என்று தெரிவித்தார். வழக்கமான நடைமுறைப்படி சென்னையிலே நிரந்தரமாகக் குடியிருக்கும் சட்டமன்ற உறுப்பினர்களுக்கு மட்டுமே சென்னையில் நடைபெறும் குடியரசு தின விழா மற்றும் சுதந்திர தின விழாக்களுக்கான அழைப்பிதழ் வழங்கப்படும். மற்ற சட்டமன்ற உறுப்பினர்களுக்கு அந்தந்த மாவட்டத்திலுள்ள மாவட்ட ஆட்சியர்கள் அந்தந்த மாவட்டங்களில் நடைபெறும் விழாக்களுக்கு அழைப்பிதழ் வழங்குவார்கள். (குறுக்கீடுகள்) கொஞ்சம் பொறுங்கள், சொல்லி விடுகிறேன். தி.மு.க ஆட்சி நடைபெற்றபோதும் இதே நடைமுறைதான் பின்பற்றப்பட்டது என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன். இந்த ஆண்டு குடியரசு தின விழா அழைப்பிதழ் சென்னையில் நிரந்தர இருப்பிடமுள்ள 38 சட்டமன்ற உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன. இதில், எதிர்க்கட்சி உறுப்பினர்களாக உள்ள 29 பேர்களுக்கும் வழங்கப்பட்டுள்ளன. இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியைச் சார்ந்த*

[திரு. ஓ. பன்னீர்செல்வம்] [2017 ஜனவரி 27

மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் திரு. கே.ஆர். இராமசாமி உள்ளிட்ட 3 பேருக்கும் அழைப்பிதழ் நேரில் வழங்கப்பட்டுள்ளது. சென்னையில் நடைபெறும் விழாவில் பங்கேற்க வேண்டுமென்று மாவட்டங்களில் நிரந்தர இருப்பிடமுள்ள சட்டமன்ற உறுப்பினர்கள் அழைப்பிதழ் கேட்கும்போது அவர்களுக்கும் அழைப்பிதழ் வழங்கப்படும் வழக்கம் நடைமுறையில் உள்ளது. அந்த முறையில், இந்த ஆண்டு குடியரசு தின விழாவிற்கு 5 சட்டமன்ற உறுப்பினர்களுக்கு அவர்கள் கேட்டுக்கொண்டதன்பேரில் அழைப்பிதழ் வழங்கப்பட்டுள்ளது என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன். ஏற்கெனவே இருக்கின்ற நடைமுறைதான் பின்பற்றப்பட்டிருக்கிறது, இதில் எந்த உள்நோக்கமும் இல்லை என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 12—45

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள்.*

திரு. மு.க. ஸ்டாலின்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே, திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்தில் செயல்படுத்தப்பட்ட அந்த நடைமுறையைத்தான் பின்பற்றியிருக்கிறோம் என்று சொல்கிறீர்கள். எங்களை நீங்கள் பின்பற்றுவதிலே மகிழ்ச்சி. ஆனால், அதே நேரத்தில் நாங்கள் எடுத்து வைக்கக்கூடிய கோரிக்கை, மாவட்ட அளவில் நடைபெறக்கூடிய அந்த நிகழ்ச்சிகளுக்கு அந்தந்த மாவட்டத்தில் இருக்கக்கூடிய சட்டமன்ற உறுப்பினர்களுக்கு அழைப்பிதழ் அனுப்புவதிலே எந்தத் தவறும் இருக்க வாய்ப்பில்லை. ஆனால் பொதுவாக, அரசின் சார்பிலே ஒட்டுமொத்தமாக விழா நடக்கிறபொழுது குடியரசு தின விழா, சுதந்திர தின விழா நடைபெறுகிறபொழுது, எல்லா சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் சென்னையில் இருக்கக்கூடியவர்களுக்கு மட்டுமல்லாமல், ஒட்டுமொத்த தமிழகம் முழுவதும் இருக்கக்கூடிய 234 சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் அனுப்பி வைப்பதுதான் சிறப்பாக இருக்கும். அதை அரசு பரிசீலனை செய்ய வேண்டுமென்று நான் தங்கள் வாயிலாகக் கேட்டுக்கொள்கிறேன்.*

2017 ஜனவரி 27]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கரி. இராமசாமி அவர்கள்.*

திரு. கரி. இராமசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அழைப்பிதழை அனுப்புவதிலே அரசுக்கு என்ன சிரமம் என்று எனக்குத் தெரியவில்லை. எல்லா சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் அனுப்புவதில் என்ன பிரச்சினை இருக்கிறது? ஒரு பிரச்சினையும் இல்லை. அதேபோல அங்கீகரிக்கப்பட்ட கட்சிகளினுடைய தலைவருக்கும் நீங்கள் அனுப்பி வைக்க வேண்டும். அதிலே உங்களுக்கு என்ன சிரமம் இருக்கிறது என்று எனக்குத் தெரியவில்லை.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *சரி விடுங்கள், விடுங்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: *நான் ஏற்கெனவே இருந்த நடைமுறையைத்தான் சொல்லியிருக்கின்றேன். தி.மு.க. ஆட்சியில் உங்களுடைய வழியை பின்பற்றித்தான் என்று நான் சொல்லவில்லை. ஏற்கெனவே, எந்த அரசு இருந்தாலும், அந்த அரசினுடைய நடைமுறையைத்தான் இந்த அரசும் பின்பற்றியிருக்கிறது என்று சொன்னேன். மாண்புமிகு உறுப்பினர்கள் சில யோசனைகளைச் சொல்லியிருக்கிறீர்கள். அந்த யோசனையைப் பரிசீலிக்க அரசு ஆவன செய்யும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

6. ஆளுநர் பேருரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின்மீது விவாதம்—*தொடர்ச்சி*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜெ. அன்பழகன் அவர்கள்.*

*__திரு. ஜெ. அன்பழகன்:__ *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உலகெங்கும் வாழ்கிற தமிழர்களின் தலைவர், என் உயிரினும் மேலான தலைவர் கலைஞர் அவர்களுக்கும், (மேசையைத் தட்டும் ஒலி) இந்த அவையிலே, எங்களையெல்லாம் வழிநடத்திச் செல்கின்ற கழகத்தினுடைய செயல் தலைவர், (மேசையைத் தட்டும் ஒலி) தமிழர்களின் எதிர்காலம், எங்கள் தளபதி அவர்களுக்கும், என்னை இந்தப் பேரவைக்கு இரண்டாம் முறையாக அனுப்பி வைத்திருக்கிற சேப்பாக்கம்–திருவல்லிக்கேணி*